இணைப்பு 2.

[428 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

‘மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம்’ குறித்த மானியக் கோரிக்கை பற்றி போக்குவரத்து அமைச்சர் திரு. ச. இராமச் சந்திரன் அவர்கள் ஆற்றும் உரை.

பேரவைத் தலைவர் அவர்களே,

கோரிக்கை எண் 2—“மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம்” என்பதன்கீழ் ரூ. 52,63,100 மானியம் வழங்கப்பட வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன்.

2. 1971-72 ஆம் ஆண்டின் போக்குவரத்துத் துறை நிர்வாகம் குறித்த ஆய்வுரை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது. இம் மாநிலத்தில் போக்குவரத்துத் தொழில்துறையில் பல முக்கிய மான மாற்றங்கள் 1971-ல் ஏற்பட்டுள்ளன. போக்குவரத்துத் துறையில் சீரான மன நிறைவளிக்கும் முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளது. போக்குவரத்து விதிமுறைகளையும் போக்கு வரத்து வசதிகளையும் மேம்படுத்த, இம்மன்ற உறுப்பினர்கள் விவாதத்தின்போது தெரிவிக்கக் கூடிய கருத்துக்களை அரசு வரவேற்கும்.

3. போக்குவரத்துத் துறைக்காக ரூ. 52,63,100 மானியத்திற்கு ஒப்புதல் வழங்க வேண்டுமென இம் மன்றத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

இணைப்பு 3

[431 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

“சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள் பற்றி போக்குவரத்து அமைச்சர் மாண்புமிகு எஸ். இராமசந்திரன் அவர்கள் ஆற்றும் உரை.”

பேரவைத் தலைவர் அவர்களே,

“கோரிக்கை 30—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள்” என்பதன் கீழ் ரூ. 10,46,10,200 மானியத்தையும், “கோரிக்கை 43—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு” என்பதன் கீழ் ரூ. 2,26,61,000 மானியமும் அரசுக்கு வழங்குமாறு நான் வேண்டுகிறேன்.

1972 மார்ச் 28]

2. இம்மாநிலத்தில் 1971-72-ல் நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து செயல்படுவது குறித்து ஆய்வுரை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

3. இந்த அரசு கடந்த 1971-72-ம் ஆண்டில் காலத்தை வென்று வாழக்கூடிய இருபெரும் சாதனைகளைப் போக்குவரத்துத் துறையில் நிறைவேற்றியுள்ளது என்பதை அறிந்திருக்கக்கூடும். முதலாவதாக தமிழ்நாடு பேருந்து உரிமையாளர்கள் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) : 1971-ம் ஆண்டின் சட்டத்தை நிறைவேற்றி போக்குவரத்துத் துறையில் பொருளாதார ஆதிக்க சக்தியாக இருந்துவந்த பஸ் அதிபர்களது பயணிப் பேருந்துகளை அரசுடைமையாக்கியுள்ளது. இரண்டாவதாக, நிருவாகச் சிரமைப்பின் மூலம் மக்களுக்கு மேலும் பலவசதிகளைச் செய்து தரமுடியும் என்று கருதிய இந்த அரசு அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து நிறுவனங்களைத் திறம்பட நிர்வகிப்பதற்கென்று 1956-ம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட நான்கு போக்குவரத்துக் கழகங்களை உருவாக்கியுள்ளது. 1972-ம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாளிலிருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையால் சென்னை--செங்கை மாவட்டங்களில் நிர்வகிக்கப்பட்ட 1,298 பேருந்துகளை தன்னகப்படுத்திக்கொண்டு பல்லவா போக்குவரத்துக் கழகம் செயல்பட்டு வருகிறது. 1972-ம் ஆண்டு சனவரித் திங்கள் 17-ம் நாளிலிருந்து " சதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட் " நிறுவனத்தினரால் நிருவகிக்கப்பட்ட 346 பேருந்துகளை தன்னகப்படுத்திக்கொண்டு மதுரை பாண்டியன் போக்குவரத்துக் கழகம் செயல்பட்டு வருகிறது. கும்பகோணம் ஸ்ரீராமவிலாஸ் கம்பெனி, இராமன் & இராமன் கம்பெனி ஆகிய நிறுவனங்களால் நிர்வகிக்கப்பட்ட 178 பேருந்துகளைத் தன்னகப்படுத்திக்கொண்டு சோழன் போக்குவரத்து கழகமும், பொள்ளாச்சி ஆனைமலை பஸ் டிரான்ஸ்போர்ட் கம்பெனியின் 110 பேருந்துகளை தன்னகப்படுத்திக்கொண்டு சேரன் போக்குவரத்துக் கழகமும் இந்த ஆண்டு மார்ச் திங்கள் முதல் நாளிலிருந்து செயல்பட்டு வருகின்றன என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். இந்த நடவடிக்கைகள் யாவும் பொருளாதார ஆதிக்கம் சிலரிடையே குவிந்து கிடைப்பதை தவிர்த்திடும் நோக்கத்தோடு இந்த அரசினால் கொண்டுவரப்பட்டுள்ள செயல்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன்.